செ.வெ.எண்: 46 நாள்: 21.07.2021

கரூர் மாவட்டம்

**மாவட்ட அரசு அருங்காட்சியகத்தினை மேம்படுத்தி சொந்த கட்டடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் – மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. V செந்தில்பாலாஜி அவர்கள் தகவல்**

அதன் விபரம் வருமாறு:

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. V செந்தில்பாலாஜி அவர்கள், கரூர் நகராட்சி பழைய திண்டுக்கல் சாலையில் அமைந்துள்ள மாவட்ட அரசு அருங்காட்சியகத்தினை 21.07.2021 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர்,இ.ஆ.ப., அவர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள பண்டைய கால சிலைகளின் மாதிரிகள், கற்சிலைகள், பயன்படுத்தப்பட்ட தொன்மையான பொருட்கள், ஓலைச்சுவடிகள், கல்வெட்டுகள் உள்ளிட்டவற்றையும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். அதனைத்தொடர்ந்து, பயன்பாடின்றி இருக்கும் கரூர் நகராட்சியின் பழைய கட்டிடத்தில் அருங்காட்சியகத்தினை மாற்றி அமைப்பது குறித்தும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

தற்போது கரூர் மாவட்டத்தில் பழைய திண்டுக்கல் சாலை ஜவஹர் பஜார் பகுதியில் தமிழக அரசின் தமிழ்வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மாவட்ட அருங்காட்சியகமும், மாரியம்மன்கோவில் அருகில் தொல்லியல்துறையின் கட்டுப்பாட்டில் அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் இடம்பெற்றுள்ள அகழ்வைப்பகமும் தற்போது வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது.

கரூர் மாவட்டத்தின் தொன்மையை, பெருமையை பறைசாற்றும் வகையிலான பொருட்கள் இடம்பெற்றுள்ள இந்த இரண்டு அருங்காட்சியகங்களும் வெவ்வேறு இடங்களில் உள்ளதால் பொதுமக்கள் எளிதில் சென்று பார்க்க இயலாத நிலை உள்ளது. எனவே, இந்த அருங்காட்சியகங்களை ஒருங்கிணைத்து ஒரே இடத்தில் அமைப்பதற்கும், பொதுமக்கள் எளிதில் வந்து செல்லும் வகையில் அரசின் சொந்தக்கட்டிடத்தில் அருங்காட்சியகத்தை அமைப்பதற்கும் தேவையான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கரூர் நகராட்சி நிர்வாகம் புதிய கட்டடத்தில் இயங்கி வருவதால், நகராட்சிக்குச் சொந்தமான பழைய கட்டிடத்தில் அரசு அருங்காட்சியத்தினை மாற்றியமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறு மாற்றியமைக்கப்படும் அரசு அருங்காட்சியகத்தில் கரூர் மாவட்டத்தில் உள்ள வரலாற்று அறிஞர்களின் உதவியோடு கரூர் மாவட்டத்தின் தொன்மையினை, பழம்பெருமையினை பொதுமக்களுக்கு எடுத்துக்காட்டும் வகையிலான தகவல்களை, தொன்மையான பொருட்களின் வடிவங்களை காட்சிப்படுத்தவும், முப்பரிமாண வடிவில் செய்திகளை விளக்கும் கருவிகள் பொருத்தவும், பார்வையாளர்கள் அமர்ந்து வரலாற்று செய்திகளை அறிந்துகொள்ளும் வகையிலான அரங்கம் அமைக்கவும், அருங்காட்சியகத்தினை மேம்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பாலகணேஷ், கரூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.பாலசுப்பிரமணியன், கரூர் நகராட்சி ஆணையர் திரு.சு.இராமமூர்த்தி, நகராட்சி பொறியாளர் திரு.நக்கீரன், அரசு அருங்காட்சியக காப்பாளர் திரு.மணிமுத்து உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.